22.8.2024
எம்.சி.ஓ.பி.எண்.48/2023 மற்றும் 49/2023
ம.சா.1 ஜி.ரவிகுமார் த/பெ.கோவிந்தராஜ்

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த இடத்தில் மேம்பாலம் உள்ளது. அந்த மேம்பாலம் வளைவாக உள்ளது என்றால் சரிதான். மேம்பாலம் ஏறும் இடத்தில் சாலை வளைவாக உள்ளதால் வாகனங்கள் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். எதிர் திசையில் கார் வந்தது காரை நான் 100அடி தூரத்தில் கவனித்தேன். விபத்து தொடர்பாக காவல் துறை தயார் செய்த மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எதிர் திசையில் கார் மிதமாக தான் வந்தது என்றும் விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனகுறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் என்னுடைய தவறு வெளிப்படும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக வேறு நீதிமன்றங்களில் நான் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. விபத்து என்னுடைய தவறால் நடந்து உள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுப்படி ஆக வேண்டு என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.13 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் வரவு செலவு காட்டும் வங்கி கணக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த நிறுவனத்தின் வருமான கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நிறுவனம் துவங்கி 6 மாதம் ஆகிறது. எந்த வருமான வரி கணக்கும் தாக்கல் செய்யவில்லை. அந்த நிறுவனத்தின் 6 மாத வருமானம் காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

என்னுடைய வருமானத்தை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.13 மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய கல்வி தகுதியை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுவிற்காக வயதை குறைத்தும் வருமானத்தை மிகைப்படுத்தியும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. விபத்து நடந்த உடன் நான் இராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பின்னர் சேலம் காவேரி மருத்துவமனையில் 7நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன் பின்னர் இராசிபுரம் சுபம் மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மீண்டும் 7 நாட்கள் சேலம் காவேரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

ம.சா.ஆ.7 மருத்து கடை ரசீதுகளுக்கான மருத்துவரின் பரிந்துரைகள் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.7 ஆவணத்தில் 58 மற்றும் 61வது வரிசையாக உள்ள ரசீது நகல் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சில ரசீதுகளில் பணம் பெற்றதர்கான முத்திரை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ரசீது எண்.63ல் ரூ.3,000 கையால் எழுதப்பட்டுள்ளது

என்றும் அந்த தொகை கிடைக்ககூடியது அல்ல என்றால் சரிதான். முடக்கு பயிற்சி 12 ரசீதுகளுக்கான மருத்துவ பரிந்துரைகள் இல்லை என்பதால் அந்த தொகை கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. அந்த 12 ரசீதுகள் மனுவிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ விடுப்பு அறிக்கையில் எந்த முடக்கு பயிற்சியும் பரிந்துரைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமாகி விட்டன என்றும் எனக்கு எவ்வித ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

எனது தாயார் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டார். ம.சா.ஆ.14 ஆவணத்தில் எனது தாயாரின் வயது 48 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயாரின் தொழில் மற்றும் வருமானம் தொடர்பான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுவிற்கான எனது தாயாரின் வயதை குறைத்தும் மற்றும் வருமானத்தை மிகைப்படுத்தியும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதையும் மற்றும் கவனகுறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/-Ravikumar

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.